# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


**நாள் :- 10-06-2026**

**வழக்கு எண். SA 16107/B/2024**

**விசாரணை நாள் : 24.03.2026**

கீழ்கண்ட பிழை திருத்தம் வெளியிடப்படுகிறது:-

**பிழை திருத்தம்**

மேற்கண்ட வழக்கு உத்தரவு பத்திகள் 3,4,5 மற்றும் 6 ஆகியவைகளுக்கு பதிலாக கீழ்கண்ட பத்திகள்(3,4,5 மற்றும் 6) இடம் பெறச்செய்து, **பிழை திருத்தம் வெளியிடப்படுகின்றது.**

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் 27.08.2024 தேதியிட்டு மாண்புமிகு ஆளுநருக்கு அளித்த புகார் மனுவானது, ஆளுநர் அலுவலகத்திலிருந்து தலைமைச் செயலகம், மனிதவள மேம்பாட்டு துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அத்துறையிலிருந்து அம்மனுவினை 10.09.2024 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அக்கடிதத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த தகவலை வழங்கக் கோரியதற்கு இதுநாள் வரை தகவல் வழங்கப்படவில்லை, தான் கோரிய தகவலை வழங்கிட உத்தரவிடுமாறு ஆணையத்தை கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரது 27.08.2024 தேதியிட்ட மனுவானது, மனுதாரர் மாநிலத் தலைமை தகவல் ஆணையர் மீது புகார் தெரிவித்து, மேதகு ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு, அங்கிருந்து தலைமைச் செயலகம் மனிதவளத் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதனை இணைத்து இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், மாநிலத் தலைமை தகவல் ஆணையர் மீதான புகார் குறித்து ஆணையத்தால் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை இல்லை என்பதனால், அம்மனுவின் மீது நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் அவர், மாநில தகவல் ஆணையத்தில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின் மீது ஆட்சேபணை இருக்கும் பட்சத்தில் அதுகுறித்து மாண்பமை உயர்நீதிமன்றத்தை நாடியே தீர்வுகாண இயலும் என்றும் ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவின் மீது மீள இவ்வாணையத்தால் விசாரணை மேற்கொள்ள தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழ் வழிவகை இல்லை என்றும், எடுத்துரைத்ததை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

5. இனிவருங்காலங்களில், மனுதாரர்களிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்கள் தொடர்பான தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுக்களுக்கு அம்மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதுகுறித்த விபரத்தையும், அவ்வாறு நடவடிக்கை இயலாது எனும்

பட்சத்தில் அது குறித்த தகவலையும் மனுதாரர்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் வழங்கிட பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகின்றது.

6. ஆகவே, இன்றைய விசாரணையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலர் எடுத்துரைத்த வாதத்தை இவ்வாணையம் ஏற்று, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 16107/B/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவிப் பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
நந்தனம், சென்னை - 600 035.

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்,
மனிதவள மேலாண்மை(ஆர்)த் துறை,
தலைமைச் செயலகம்,சென்னை - 600 009.

திரு.கு.பாலதண்டபாணி,
180/215, காந்திபுரம்,
தாராபுரம்,திருப்பூர் - 638 656.

Copy to: File
Sj/Ps- 10/06/2026